RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s2025

# நன்னூலாசிரியர் “பவணந்தி முனிவர் பார்வையில் ஆசிரியர் மாணவர் உறவு”

**இரா. ஜெய்சங்கர் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, குமுளூர் இலால்குடி - 621712, தமிழ்நாடு, இந்தியா..

# Teacher-student Relationship in the eyes of Nannool Creator Pavananthi Munivar

**R. Jaisankar [a, *]**

[a] Department of Tamil, Government Arts College, Kumulur, Lalkudi-621712, Tamil Nadu, India

* Corresponding Author: bdujaisankar@gmail.com

Received: 30-06-2022
Revised: 26-09-2022
Accepted: 08-10-2022
Published: 05-11-2022

**ABSTRACT**

In the modern context of slowly and gradually slackening the teacher-student relationship, it is the need of the hour to reconstruct the pedagogical thinking of the Nannool Creator Pavananthi Munivar about the teacher-student. He has described the virtues of the teacher, and student, as well as the method of listening and learning, by comparing them with simple life practices. When teachers and students imbibe this idea well, the relationship between them becomes healthy and appreciated. The teacher-student relationship will be considered sacred if teachers and students improve themselves in keeping with the emerging technological developments and act as if they are a torchbearer without getting too close to each other and not getting too far away from each other. The author's classification of teachers and students and comparing them with simple practical evidence reveals his psychological insight. When this area is subjected to multidisciplinary research, it will be useful for the development of the teacher and the student.

**Keywords:** Relationship, Pavananthi Munivar, Teacher, Student

## முன்னுரை

தமிழ்மொழியின் இலக்கணத்தை முதன்மையாகவும் முதலாவதாகவும் விவரிக்கக்கூடிய நூலாகத் தொல்காப்பியம் திகழ்கிறது. இந்நூலை அடியொற்றி பவணந்தி முனிவரின் நன்னூல் தமிழ்மொழியின் எழுத்து மற்றும் சொல்லிணக்கத்தை விவரிக்கிறது. இந்நூலின் பாயிரவியலில் ஆசிரியருக்கானத் தகுதிகள் ஆசிரியர் ஆகாதவர்களின் இயல்புகள் மாணாக்கருக்குரிய இலக்கணம் மாணாக்கர் ஆகாதவர் இயல்புகள் ஆசிரியர் பாடம் நடத்தும் முறை மாணவர் பாடம் கேட்கும் முறை மாணவர் பாடம் பயிலும் முறை ஆசிரியருடன் மாணவர் பழகும் முறை மாணவர் முழுப்புலமை பெற வழிகள் ஆகியவற்றை பவணந்தி முனிவர் விவரித்துள்ளார். பவணந்தி முனிவரின் பாயிரவியலை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான உறவை ஆராய முனைகிறது இவ்வாய்வுக்கட்டுரை.

பவணந்தி முனிவர் காலம் 13-ஆம் நூற்றாண்டு சீயகங்கன் என்ற குறுநில மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க இந்நூலை இயற்றி அம்மன்னனின் அவையில் அரங்கேற்றம் செய்ததாகத் தெரியவருகிறது. ஆசிரியர் என்பவர் சமூகத்தின் சிற்பியாகத் திகழக்கூடியவர். ஆசிரியர்களை மதித்து

எந்தச் சமூகம் கொண்டாடுகிறதோ அந்தச் சமூகம் மேம்பட்ட நாகரிக சமூகமாகத் திகழும் என்பது வரலாற்றுண்மை.

மாவீரன் அலெக்சாண்டர் பிறந்த போது அவருடைய தந்தையார் மன்னர் பிலிப்,எனக்கு ஆண் குழந்தை பிறந்திருப்பதில் மகிழ்ச்சி,அதைவிட மகிழ்ச்சி என்னவென்றால் எனது குருநாதர் அரிஸ்டாட்டிலிடம் எனது மகனும் படிக்கப் போகிறான் என்பதில் பெருமகிழ்ச்சி என்று கூறினாராம். இக்கூற்றிலிருந்து ஆசிரியர் மாணவர் உறவு எவ்வளவு பெருமைக்குரியது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

பவணந்தி முனிவரின் பாயிரவியலைப் பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் போது, ஆசிரியருக்கான தகுதிகள்,ஆசிரியர் அல்லாதவரின் இயல்புகள், மாணவருக்கான தகுதிகள்,மாணவர் ஆகாதார் இயல்புகள்,மாணவர் பாடம் கேட்கும்,பயிலும் முறை ஆகியவற்றை மிகத்தெளிவாக வரையறை செய்திருப்பது பிற இலக்கண நூலில் காண இயலாத தகவலாக அமைந்துள்ளது. பவணந்தியாரின் ஆசிரியர்,மாணவர் பற்றிய இலக்கண வரையறைகள் முழுவதும் தற்காலத்தில் பொருத்தம் உடையதாக அமையவில்லை. எனினும் பெரும்பான்மையும் பொருந்துவதாக அமைகிறது. இவர் வரையறுத்துள்ள விதிமுறைகளைப் பின்பற்றி ஆசிரியர், மாணவர் நடந்து கொள்ளும் போது அவர்களுக்கிடையேயான உறவுகள் மிகச் சிறப்பானதாக அமையும்.

இந்திய சமூகத்தில் இதிகாச,புராணங்கள் தோன்றிய காலம் தொட்டு,தற்காலம் வரை ஆசிரியர் மாணவர் உறவு என்பது போற்றத்தக்க ஒன்றாகத் திகழ்கிறது. மாதா,பிதா,குரு,தெய்வம் என்ற வரிசையில் தாய்,தந்தைக்கு அடுத்த நிலையில் ஆசிரியரை வைத்து கொண்டாடி வருகிறோம்.

## ஆசிரியர் இலக்கணம்

பவணந்தி முனிவர் ஆசிரியரின் இலக்கணமாக

“குலன் அருள் தெய்வம்கொள்கை மேன்மை

கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை

நிலம்மலை நிறைகோல் மலர்நிகர் மாட்சியும்

உலகியல் அறிவோடு உயர்குணம் இனையவும்

அமைபவன் நூல் உரை ஆசிரிய யன்னே”

சமூகத்தை நல்வழிப்படுத்ததுவதிலும், திசைதெரியாது, தறிகெட்டு திக்கற்று நிற்கும் இளைஞர்களுக்கும், இவ்வுலக வாழ்வைப் புரிந்து கொள்ள துடிக்கும் இளைஞர்களுக்கும், வழிகாட்டக்கூடியவராகவும் கலங்கரை விளக்காகவும் திகழக்கூடிய ஆசிரிய பெருமக்களின் இலக்கணமாக மேற்கூறிய நூற்பாவழி பவணந்தி முனிவர் தெளிவுப்படுத்தியுள்ளார் (Ilavarasu, 1998).

இந்நூற்பாவில், ஆசிரியர்களை நிலம், மலை ,நிறைகோல், மலர் ஆகியவற்றோடு உவமைப்படுத்தியிருப்பது, சிந்திக்கத் தக்கதாகவும், ஆசிரியர், மாணவர்களுக்கிடையேயுள்ள உறவின் ஆழ, அகலத்தை வெளிப்படுத்தும் விதமாகவும் அமைகிறது

## ஆசிரியர்களை நிலத்தோடு ஒப்புமைப்படுத்தல்

நிலம் அளவிடமுடியாத எல்லையையும், பொறுமையையும், பயனையும் உடையது. அவ்வாறு ஆசிரியரும் அளவிடமுடியாத அறிவு பெற்றவராகவும், பொறுமை, சமூகத்திற்கு அளவில்லாத பயனளிக்கக் கூடியவராகவும் திகழ வேண்டும். வள்ளுவரின்,

“அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை”

என்ற குறள் ஒப்பிடத்தக்கவையாக அமைகிறது (Parimelalhagar, 1998).

## மலையோடு ஒப்புமைப்படுத்தல்

மலை அசைக்க முடியாத உறுதியும், அளவிட முடியாத வளமும், தொலைவில் உள்ளவர்களும் காணும் சிறப்பும், வானம் வரண்டாலம் சுனைநீரை கொடுத்து உயிர்களை காக்கும் கொடைத்தன்மை கொண்டது. இம்மலையைப் போல் ஆசிரியர் வலிமையான மனஉறுதியும் பிறரால் வெல்ல முடியாத புலமையும், தொலைவில் உள்ளவரும் பாராட்டும் சிறப்பும், தான் வறுமையில் உழன்றாலும், மாணவர்களுக்குக் கல்விப் போதிப்பதில் வல்லமை உடையவராகவும், திகழ வேண்டுமென பவணந்தியர் கூறுவது அவரின் ஆழ்ந்த, தூய்மையான சமூகப்பற்றை வெளிப்படுத்தும் விதமாக அமைகிறது.

## நிறைகோலோடு (தராசு) ஒப்புமைப்படுத்தல்

தராசு பொருளின் அளவை,ஐயம்தீர தெளிவாகக் காட்டுவதுபோல,ஆசிரியர், மாணவர்களுக்கு பாடத்தை ஐயம்தீர தெளிவாகக் கற்றுக் கொடுக்க வேண்டும். வேண்டிய மாணவர்,வேண்டாத மாணவர் என்று பாகுபாடு பார்க்காமல், நடுநிலைமையுடன் செயல்பட வேண்டுமென பவணந்தி முனிவர் சுட்டிக்காட்டியிருப்பது ஆசிரியர்கள் நடுநாயகர்களாகத் திகழும் போது மாணவர் மத்தியில் நல்ல உறவு மேம்படும்,சமூகத்தில் சமத்துவம் மேலோங்கும் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

## மலரோடு ஒப்புமைப்படுத்தல்

மலரை அனைவரும் விரும்புவது போல,ஆசிரியரை மாணவர்கள் உளப்பூர்வமாக நேசிக்க வேண்டும். மலரின் மென்மைத்தன்மை, உரிய காலத்தில் மலரும் தன்மை,வாசனைப் பரப்பும் தன்மைப்போல, ஆசிரியர் மாணவர்களிடம் மென்மையான அணுகுமுறை கொண்டவராகவும், உரிய காலத்தில் பாடத்தைக் கற்றுக் கொடுப்பவராகவும், மலரை நோக்கி வரும் வண்டுபோல,ஆசிரியரை நோக்கி மாணவர் அறிவுத் தாகத்துடன் வருமாறு நடந்து கொள்வது சிறப்பானது இதனால் ஆசிரியர் மாணவர் உறவு மேம்படும் என்பதை பவணந்தி முனிவர் தெளிவுப்படுத்திருப்பதைக் காண முடிகிறது

## ஆசிரியர் ஆகாதவர்கள்

ஆசிரியர்களுக்கு இருக்கக்கூடாத குணங்களாக பவணந்தியார் பின்வருமாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

"மொழிகுணம் இன்மையும் இழிகுண இயல்பும்
அழுக்காறு அவா வஞ்சம் அச்சம் ஆடலும்
கழற்குடம் மடற்பனை பருத்திக் குண்டிகை
முடத்தெங்கு ஒப்பு என முரண் கொள் சிந்தையும்
உடையோர் இலர் ஆசிரியரா குதலே"

கல்வி கற்பிக்கும் ஆற்றல் இல்லாமல் இருத்தல்,இழிந்த குணங்களைக் கொண்டிருத்தல், பொறாமை, பேராசை, வஞ்சம், மாணவர்கள் தன்னைக் கண்டு அஞ்சும்படி நடத்தல்,தான் மாணவர்களைக் கண்டு அஞ்சுதல் ஆகிய குணங்களை கொண்டிருப்பது ஆசிரியருக்குரிய இலக்கணம் அல்ல. மேலும், 1.கழற்குடம், 2.மடற்பனை, 3. பருத்திக்குண்டிகை 4. முடத்தெங்கு ஆகியவற்றோடு ஆசிரியர் ஆகாதவர்களை பவணந்தியார் உவமைப்படுத்தியிருப்பது மிகச்சிறப்பாக உள்ளது (Ilavarasu, 1998).

## மடற்பனையோடு ஒப்புமைப்படுத்தல்

மடற்பனை அருகில் யாரும் எளிதில் சென்று பழங்களைப் பறித்துக் கொள்ள முடியாது. அவைத் தானாக பழுத்து கீழே வீழ்ந்தால் உண்ணலாம். அதுபோல மாணவர்களை ஆசிரியர்கள் தங்களிடம் நெருங்கி வர விடாமல் நடந்து கொள்வது மாணவர் - ஆசிரியர் இடையேயான உறவு இனக்கமாக அமையாது என்பதை பவணந்தியார் எளிய உவமை வாயிலாகச் சுட்டிக்காட்டியிருப்பது சிறப்பாக உள்ளது.

## பருத்திக் குண்டிகையோடு ஒப்புமைப்படுத்தல்

பருத்தியை அடைத்து வைக்கும் சிறிய வாயை உடைய குடுக்கைக்குப் பருத்திக் குண்டிகை என்று பெயர். இக்குண்டிகையில் பருத்தியைச் சிறிது சிறிதாக உள்ளே அடைத்து வைக்கவும்,பின்பு அதிலிருந்து பஞ்சை சிறிது சிறிதாகவே எடுக்க முடியும். அதுபோல கல்வி கற்கும் காலத்தில் மெதுவாகக் கற்று, பின்பு அதனைக் கற்றுக் கொடுக்கும் போது சிறிது சிறிதாக கற்றுக் கொடுப்பது நல்லாசிரியராகத் திகழ முடியாது. இதனால் ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான நல்ல புரிதலும், இணக்கமான உறவும் உருவாகாது என்பதை நன்னூலாசிரியர் விவரித்திருப்பதைக் காண முடிகிறது.

## முடத்தெங்கோடு ஒப்புமைப்படுத்தல்

முடத்தெங்கு (வளைந்து வளரும் தென்னைமரம்),நீர் பாய்ச்சி உரம் இட்டு வளர்ப்பவனுக்கு பயன்படாமல்,வளைந்து புறமாகச் சென்று அடுத்தவருக்குப் பயன்படுவதுபோல,பொருள் கொடுத்து வழிபடும் மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்காமல் பிறருக்கு கற்றுக் கொடுத்தல் (அரசு ஆசிரியர் தனியாக Tuition நடத்துவது போல) ஆசிரியருக்கு அழகல்ல என்பதை நூலாசிரியர் முடத்தெங்குடன் ஒப்புமைப்படுத்தி எண்ணி மகிழத்தக்கதாகவும், சிந்திக்கத்தக்கதாகவும் அமைந்துள்ளது.

இவ்வாறு ஆசிரியருக்குரிய இலக்கணம், ஆசிரியர் அல்லாதோரின் இலக்கணத்தை மிக இயல்பான உதாரணங்கள் வழி உவமைப்படுத்தி நன்னூலாசிரியர் விவரித்திருப்பது, ஆசிரியர் மாணவர்களுக்கும், சமூகத்திற்கும் முன்மாதிரியாகத் திகழக்கூடியவர் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

## மாணக்கர் இலக்கணம்

நல்லாசிரியர் இலக்கணத்தையும், ஆசிரியர் ஆகாதோர் இலக்கணத்தையும் வரையறை செய்த நன்னூலாசிரியர் நூலை கற்கும் மாணவர்களின் இயல்பிற்கு ஏற்ப மாணவர்களை மூவகையாக வகைப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

“அன்னம் ஆவே மண்ணொடு கிளியே

இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி

அன்னர் தலை இடை கடைமா ணாக்கர்” (Ilavarasu, 1998)

## தலைமாணாக்கர்

நன்னூலாசிரியர் தலைமாணக்கரை அன்னப்பறவையோடும், பசுவோடும் ஒப்புமைப்படுத்தியுள்ளார். பாலையும், நீரையும் கலந்து வைப்பினும் பாலை மட்டும் உண்ணும் தன்மை உடையது அன்னப்பறவை. இவைப்போன்று தலைமாணக்கர் என்பவர் ஆசிரியர் கூறியவற்றுள் நல்லதை, தேவையானவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளும் பண்புடையவராகத் திகழ வேண்டும் என்கிறார். மேலும் பசுவானது நல்ல புல்லைக் கண்டவுடன் விரைந்து உண்டு, பின்னர் அசைப்போடுவது

போல, தலை மாணக்கர் ஆசிரியர் கூறுவதை விரைவாகக் கிரகித்துக் கொண்டு பின்பு சிந்தித்து செயலாற்ற வேண்டும் என்கிறார் நன்னூலாசிரியர்.

"எப்பொருள் யார்யார் வாயக் கேட்பினும் அப்பொருள்

மெய்ப் பொருள் காண்பதறிவு"

என்ற வள்ளுவரின் சிந்தனை,நன்னூலாசிரியர் சிந்தனையோடு ஒப்பிடத்தக்கதாக அமைகிறது (Parimelalhagar, 1998).

## இடைமாணக்கர்

உழவனின் உழைப்பிற்கு ஏற்ப, மண் விளைச்சல்களைக் கொடுப்பது போல, ஆசிரியரின் உழைப்பிற்கு ஏற்ப இடைமாணக்கர் அறிவைப் பெறுவர். மேலும் இவர் கிளிப்பிள்ளைப் போல ஆசிரியர் கற்பித்ததை அப்படியே திருப்பிக் கூறுவர்.

## கடைமாணக்கர்

நன்னூலாசிரியர் கடைமாணக்கரை இல்லிக்குடம் (ஓட்டைக்குடம்),ஆடு,எருமை,நெய்யரி (பன்னாடை) ஆகியவற்றோடு ஒப்புமைப்படுத்தி விவரித்துள்ளார். கடைமாணக்கர் ஓட்டைக்குடம் போல,கேட்கும் பாடத்தை மனதில் பதியவைக்காமல் விட்டுவிடுவர். ஆடுபோல அலைந்து திரிந்து எந்தவொரு ஆசிரியரிடமும் முழுமையாகப் பாடம் கேட்க மாட்டார். நல்ல நீரை கலக்கிகுடிக்கும் எருமைப்போல ஆசிரியர் உள்ளத்தை வருத்துவர். அழுக்கைத் தேக்கி வைத்துக்கொள்ளும் பன்னாடைப் போன்று நல்லதை விடுத்து, தேவையற்றதை மனதில் நிலை நிறுத்திக் கொள்பவரே கடைமாணக்கராவர்.

நன்னூலசிரியர் விவரிப்பது போல, மாணவர்களின் கற்கும்திறன், அவர்களின் உளவியல் பாங்கு ஆகியவற்றை ஆசிரியர் தெளிவாகத் தெரிந்து கொண்டு பாடம் கற்பிக்கும் போது ஆசிரியர் - மாணவர் உறவு பாராட்டத்தக்கதாக அமையும். மாணாக்கர் ஆகாதவர்களாக 14 குணங்களை நன்னூலாசிரியர் குறிப்பிடுகிறார். இக்குணங்கள் தற்காலத்திற்கு முழுமையும் பொருத்தமுடையதாக அமையவில்லை.

## பாடம் கேட்கும் முறை

1. பாடம் கேட்கும் மாணவர் உரிய காலத்தில் பாடம் கேட்கச் செல்ல வேண்டும்.
2. ஆசிரியரை வணங்கி அவரின் குறிப்பறிந்து செயல்பட வேண்டும்.
3. மிகுந்த தாகம் கொண்டவன் நீரைப் பருகத் துடிப்பது போல, மாணவர்
4. விருப்பத்துடன் பாடம் கேட்க வேண்டும்.
5. மாணவர் செவியை வாயாகவும், நெஞ்சைக் கலனாகவும் கொண்டு பாடம் பயில வேண்டும்.
6. முன்பு பயின்ற பாடத்தை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்

இவ்வாறு மாணவர்கள் செயல்படும்பட்சத்தில் ஆசிரியர், மாணவர் உறவு ஆரோக்கியமானதாகத் திகழும். ஆனால் தற்காலத்தில், புதிய கண்டுபிடிப்புகள், அச்சு ஊடகப்பெருக்கம், சமூக ஊடகப்பெருக்கம், இணையதள வசதிகள் ஆகியவற்றின் பயன்பாட்டினால் மாணவர்களின் அறிவு மேம்பாடு வளர்ச்சிப் பெற்றிருப்பினும், மேற்கூறியவற்றினால் மாணவர்களுடையே, கவனச்சிதறல் அதிகரித்து, ஆசிரியர் மாணவர் உறவில் விரும்பத்தகாத மாற்றம் ஏற்பட்டியிருப்பதை மறுப்பதற்கில்லை. இவைத்தொடர்பான ஆரோக்கியமான ஆய்வும் சிந்தனையும் தேவையாக உள்ளது

## மாணவர் பாடம் பயிலும் முறை

மாணவர் பாடம் பயிலும் போது உலக வழக்கையும்,செய்யுள் வழக்கையும் அறிதல் வேண்டும். மூலப்பாடத்தைப் படித்து சிந்தித்தல் வேண்டும். பயின்ற பாடத்தை நினைத்துப்பார்த்தல், தனது ஐயம் தீர ஆசிரியரிடம் சென்று விளக்கம் பெறல்,எப்போதும் கல்விப் பற்றி சிந்திக்கக்கூடிய மாணவர்களிடம் பழகுதல்,ஐயம் தெளிந்து பிறர் ஐயத்தைப் போக்குதல் ஆகியவை மாணவர் பாடம் பயிலும் முறையாக நன்னூலாசிரியர் சுட்டிக்காட்டியிருப்பதைக் காணமுடிகிறது.

இவ்வாறு மாணவர் ஆசிரியரிடம் பாடம் கேட்டாலும்,கால்பங்கு புலமையை மட்டுமே பெறுவார் என்றும்,தன்னுடன் கற்கும் மாணவருடன் பாடத்தைப் பற்றி விவாதிப்பதன் (Group discussion) மூலம் மேலும் கால் பங்கு புலமை பெறுவார் என்றும்,எஞ்சிய அரைப்பங்கினை தன்னோடு கற்பவருக்கும், பிறருக்கும் எடுத்துரைப்பதன் மூலம் பெறுவார் என நன்னூலாசிரியர் கூறுவது,தற்கால கல்வி பயிற்றுவிக்கும் முறையைவிட மிகச் சிறப்பாக நன்னூலாசிரியர் சிந்தித்திருப்பதை அறிய முடிகிறது.

“அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்

செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்

மையறு புலமை மாண்புடைத்து ஆகும்”

இவ்வாறு கல்வி பயிலும் முறை அமைந்தால் ஆசிரியர் - மாணவர் உறவும் மணாவர்களுக்கிடையேயான உறவும் மிகச் சிறப்பானதாக அமையும் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை (Ilavarasu, 1998).

## ஆசிரியருடன் மாணவர் பழகும் முறை

ஆசிரியரிடம் மாணவர் பாடம் பயிலும் போது அல்லது பழகும் போது ஆசிரியரிடம் அச்சம் கொண்டு நீங்காமலும் ஆர்வம் கொண்டு மிக நெருங்காமலும் நெருப்பில் குளிர்காய்பவன் போல் பழக வேண்டும். ஆசிரியரிடம் மாணவன் அன்பு ததும்பும் உள்ளத்துடனும் அறத்திற்கு புறம்பான செயல்களைச் செய்யாமல் இருக்க வேண்டுமென நன்னூலாசிரியர் தெளிவுப் படுத்தியிருப்பதைக் காண முடிகிறது.

“அழலின் நீங்கான் அணுகான் அஞ்சி

நிழலின் நீங்கான் நிறைந்த நெஞ்சமோடு

எத்திறத்து ஆசான் உவக்கும் அத்திறம்

அறத்தின் திரியாப் படர்ச்சிவழி பாடே”

இச்சிந்தனை ஆசிரியர் - மாணவர் உளவியலை அடிப்படையாகக் கொண்டு நன்னூலாசிரியர் 13 நூற்றாண்டில் சிந்தித்திருப்பதும் தற்காலத்திலும் வழிகாட்டியாக அமைவதும் போற்றுதலுக்குரியது (Ilavarasu, 1998).

## முடிவுரை

நன்னூலாசிரியர் பவணந்தி முனிவர் வரையறுத்துள்ள நல்லாசிரியர் இலக்கணம் ஆசிரியர் ஆகாதவர்கள் இலக்கணம் நல்மாணக்கர் இலக்கணம் நல்மாணக்கர் ஆகாதவர் இயல்புகள் பாடம் கேட்கும் முறை பாடம் பயிலும் முறை ஆசிரியருடன் மாணவர் பழகும் முறை ஆகியவற்றை மிகத் துல்லியமாகவும் நேர்த்தியாகவும் எளிமையான உதாரணங்கள் உவமைகள் வழி விவரித்துள்ளார் ஆசிரியர்களும் மாணவர்களும் நன்னூலாசிரியர் சுட்டிக்காட்டியுள்ள வழிமுறைகளைப் பின்பற்றி ஆசிரியர் தொழிலை அறத்தொழிலாகக் கருதி செயல்பட்டால் ஆசிரியர் மாணவர் உறவு ஆரோக்கியமான உறவாக அமையும். ஆசிரியர் மாணவர் உறவில் விரிசல் ஏற்படும் இக்காலகட்டத்தில்

நன்னூலாசிரியரின் ஆசிரியர் மாணவர் தொடர்பான சிந்தனைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, முன்னெடுக்க வேண்டிய தேவையுள்ளது காலத்திற்கு ஏற்ற மாற்றத்தை ஏற்றுக்கொண்டு, பழைய மரபுகளையும், பண்பாடுகளையும் முன்னெடுக்கும் பட்சத்தில் ஆசிரியர் மாணவர் உறவு வலுவானதாகவும் மெச்சத்தக்க வகையிலும் அமையும்.

## References

Ilavarasu, Soma. (1998) Nannool Ezhuthathigaram, Mani Vasagar veeliyeedu, Chennai, India.

Parimelalhagar, (1998) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License